பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 07 2025 **THURSDAY** 12 40**PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கானா நாட்டில் தமக்கு வழங்கப்பட்ட உயரிய விருது, இந்தியா – கானா இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்த உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க ஏதுவாக, வலுவான டிஜிட்டல் அடித்தளமிடப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. ஜம்மு காஷ்மீரை வளர்ச்சியடைந்த பிரதேசமாக மாற்ற, பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. காஸா அமைதி உடன்படிக்கை தொடர்பாக சர்வதேச மத்தியஸ்தர்கள் தெரிவித்துள்ள யோசனைகள் குறித்து ஆலோசித்து வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சஞ்சு மற்றும் அனாமிகா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

கானா நாட்டில் தமக்கு வழங்கப்பட்ட உயரிய விருது, இந்தியா – கானா இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**Accra** -வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விருதை பெற்றுக் கொண்ட பின், ஏற்புரையாற்றிய பிரதமர் இந்த விருதை, இளைஞர்களின் வளமான எதிர்காலம், கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் இந்தியா – கானா இடையிலான வரலாற்று சிறப்புமிக்க நட்புறவுக்கு அர்ப்பணிப்பதாக கூறினார்.

இந்த கௌரவம் பொறுப்புணர்வை ஏற்படுத்துவதாக குறிப்பிட்ட பிரதமர், கானாவின் மேம்பாட்டிற்கு நம்பகமான நட்பு நாடாக இந்தியா தொடர்ந்து திகழும் என்று தெரிவித்தார்.

தமது கானா பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை டிரினிடாட் டொபேகோ செல்கிறார்.

>>>>>>><<<<<<<

இந்நிலையில், கானா நாட்டின் உயரிய விருதை பெற்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விருது, பிரதமருக்கு வழங்கப்பட்ட 24-வது சர்வதேச விருது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமை மற்றும் ராஜதந்திரம் காரணமாக இந்தியாவிற்கு உலக அளவில் முக்கியத்துவம் அதிகரித்து வருவதை இந்த விருது எடுத்துக்காட்டுவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கானா நாட்டின் உயரிய விருது, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டிருப்பது, உலக அளவில் அவருக்கு உள்ள செல்வாக்கை பிரதிபலிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விருது, பிரதமரின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய வழிகாட்டுதலால் உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு, உயர்ந்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க ஏதுவாக, வலுவான டிஜிட்டல் அடித்தளமிடப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தாம் எழுதிய கட்டுரை ஒன்றை சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், டிஜி லாக்கர் தளத்தில் இதுவரை 54 கோடி பயனாளர்கள் பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

இது, ஜப்பானின் மக்கள்தொகையை விட 4 மடங்கு அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீக்ஷா, ஸ்வயம் மற்றும் பிரதமரின் இ-வித்யா போன்ற கல்வி சார்ந்த டிஜிட்டல் தளங்களை பிராந்திய மொழிகளிலேயே லட்சக்கணக்கான மாணவர்கள் தற்போது பயன்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, விவசாயிகள் பருவநிலை குறித்த தகவல்கள், மண்வள அட்டை மற்றும் சந்தை நிலவரங்களை டிஜிட்டல் முறையிலேயே அறிந்து வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு காஷ்மீரை வளர்ச்சியடைந்த பிரதேசமாக மாற்ற, பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபூண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஜம்மு காஷ்மீர் உலகின் சொர்க்க பூமியாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் வேளாண் வளர்ச்சி குறித்து தாம் இன்று நேரில் ஆய்வு செய்யவுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், அப்பகுதியில் வேளாண் தொழில் செழிக்கவும், விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

கிராமப்புற சாலை மேம்பாடு, ஏழைகளுக்கான வீட்டு வசதி திட்டம், போன்றவற்றை நிறைவேற்ற அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு கஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை பிடிப்பதற்காக, பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், மத்திய – மாநில பாதுகாப்புப் படையினர் நேற்று மாலை கூட்டாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

நள்ளிரவு வரை நடைபெற்ற இந்த சண்டை, சற்று நிறுத்தப்பட்டிருந்த நிலையில், இன்று காலை தேடுதல் வேட்டை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

காஸா பகுதியில் நடைபெற்று வரும் சண்டையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச மத்தியஸ்தர்கள் தெரிவித்துள்ள அமைதி உடன்படிக்கை தொடர்பான யோசனைகள் குறித்து ஆலோசித்து வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அமைதிப் பேச்சுவார்த்தைகள் மிகவும் பொறுப்பான வகையில் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சுமுகநிலையை ஏற்படுத்த மத்தியஸ்தர்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு உகந்த சூழல் உருவாகி வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை அடையாறு சாஸ்திரி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

பின்னர், தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக நீர்வளத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள செயற்கைக்கோள் அடிப்படையிலான தகவல் மேலாண்மை அமைப்பின் இணையதள சேவையையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் வேலைவாய்ப்புத்துறை சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், வாணியம்பாடியில் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் இந்த முகாமில் பங்கேற்று பயனடையுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

ராஜஸ்தான், மஹாராஷ்ட்ரா, கோவா, கொங்கன், கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதுதொடர்பாக அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அருணாச்சலப்பிரதேசம், குஜராத், கேரளா, நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் திரிபுராவின் ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பீகார், சத்திஷ்கட், ஹிமாச்சலப்பிரதேசம், ஜார்கண்ட், பஞ்சாப், உத்ராகண்ட், தெலங்கானா மற்றும் தமிழகத்தின் ஒருசில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, ராஜஸ்தான் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக **Jalore** பகுதியில் மழைநீர் தேங்கியுள்ளதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**>>>>>>><<<<<<<**

வணிகக்கடன் அல்லாத பிறவகை கடன்தொகையை முன்கூட்டியே செலுத்துவதற்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பதற்கு ரிசர்வ் வங்கி தடை விதித்துள்ளது. கடன் தொகையை முன்கூட்டியே செலுத்துவதற்கான இந்த புதிய வழிகாட்டு நெறிமுறை, அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வங்கி சாரா நிதிநிறுவனங்கள் மற்றும் அகில இந்திய நிதி நிறுவனங்களுக்கு இந்த உத்தரவு பொருந்தும் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

**>>>>>>><<<<<<<**

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சஞ்சு மற்றும் அனாமிகா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர். கஜகஸ்தானின், அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 60 கிலோ எடைப்பிரிவில் சஞ்சு 5-0 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் **Jajaria Gonzalez** -ஐ வென்றார்.

51 கிலோ எடைப்பிரிவில் அனாமிகா துருக்கியின் **Taskin-**ஐயும் வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் **Jamwal,** அஜர்பைஜானின் **Hasanov-**வையும் வென்றனர்.

**>>>>>>><<<<<<<**

மலேசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் **Nithin Ragavender** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 14-21, 22-20, 21-18 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Liew Taan Hao-**வை வென்றார்.

**>>>>>>><<<<<<<**

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே - சீனாவின் **Zheng** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>>END<<<<<<<**